## சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

சபரகமுவ மாகாண அரச சேவையின் கீழ் வெற்றிடமாக உள்ள மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு தகுதியான அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் நாடு முழுவதும் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | தேவையான தகமைகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | வெற்றிடம் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | சபரகமுவ மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | கீழே 1.1 பார்க்கவும் | 01 | மாகாண ஆயுர்வேத திணைக்களம் சப்ரகமுவ மாகாண சபை |

குறிப்பு – விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்குள் (2025.08.11) குறித்த பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மற்றும் தகைமையை நிரூபிக்கும் அனைத்து சான்றிதழ்களின் நகல் ( தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் ) மற்றும் பிறப்புச் சான்றிதழ் நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

### 01.அடிப்படை தகைமைகள்

1.1 இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையில் நிர்வாக தரம் I அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

மேலே உள்ள 1:1 இன் படி இலங்கை ஆயுர்வேத வைத்திய வேவையின் நிர்வாக தரம் 1 அதிகாரி ஒருவர் விண்ணப்பிக்காத சந்தர்ப்பங்களில் , உரிய அதிகாரி நியமிக்கும் வரை கீழே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் பதில் அடிப்படையில் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்கள்.

(அ). ஆயுர்வேத வைத்திய சேவையில் நிர்வாக தரம் II இல் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

(ஆ). ஆயுர்வேத வைத்திய சேவையில் நிர்வாக தரம் I இல் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

மேலே உள்ள (அ) அல்லது (ஆ) தகுதிகளுடன் கீழே உள்ள i மற்றும் ii தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனத்தில் , முதுகலை பட்டப் படிப்பு நிறுவனம் அல்லது பல்கலைக்கழகத்தில் ஆயுர்வேத மருத்துவ முகாமைத்துவத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ii. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி / போதனா ஆயுர்வேத மருத்துவமனை , மாவட்ட ஆயுர்வேத / கிராமப்புற ஆயுர்வேத மருத்துவமனையில் மருத்துவமனை பணிப்பாளர் / பொறுப்பான மருத்துவ அதிகாரி/ மருத்துவக் கண்காணிப்பாளராக 03 ஆண்டுகளுக்கு குறையாத சேவைக் காலத்தை நிறைவு செய்திருக்க வேண்டும். அல்லது மாகாண ஆயுர்வேதத் துறையில் துணை / உதவி ஆயுர்வேத ஆணையாளராக 03 ஆண்டுகளுக்கு குறையாத சேவைக் காலத்தை நிறைவு செய்திருக்க வேண்டும்.(முறையான நியமனம் அல்லது பதில் நியமனம் பெற்று ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் II அல்லது தரம் I ற்கு உரிய பதவியில் பணியாற்றிய காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

1:2 பொது சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இன் விதிகளின் படி எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

1:3 விண்ணப்பித்த திகதிக்கு முந்தைய 05 வருடங்களில் செயலில் மற்றும் திருப்திகரமான சேவையினை பெற்றிருக்க வேண்டும்.

1:4 விண்ணப்பித்த திகதிக்கு முந்தைய 05 வருட காலப்பகுதியில் செயற்திறன் மதிப்பீடு , திருப்திகரமான அளவில் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.மேலும் அந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய அனைத்து சம்பள உயர்வுகளும் பெற்றிருக்க வேண்டும்.

1:5 சிறந்த குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

02. சம்பள அளவுத்திட்டம்

இந்த பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் அ.நி.சு 10/2025 இல் SL 1 – 2025 – ரூ.82,150-10*2400-8*2940 -17*3900 – 195,970/- ஆகும்.இந்த சம்பள அளவு திட்டத்தில் 20 ஆவது படிநிலை ஆரம்ப சம்பளமாக அமையும்.

03.வயதெல்லை

ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளிடம் இருந்து மட்டுமே நாடு முழுவதும் விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் வயதெல்லைக் கிடையாது.

04.கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்குத் தோன்றுவார்கள். அங்கு மதிப்பெண்கள் சேவை மூப்பு , தகைமை மற்றும் ஆயுர்வேத மருத்துவத்திற்கான சிறந்த பங்களிப்பு மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும். அதிக மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்பதாரர் பதவிக்கு பணியமர்த்தப்படுவார்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மதிப்பெண்கள் பின்வருமாறு வழங்கப்படும்.

| | |
|---|---|
| சேவை மூப்பு | – 50 புள்ளிகள் |
| தேர்ச்சி | - 50 புள்ளிகள் |

05.அனைத்து விண்ணப்பப்படிவங்களும் முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்டு 2025.08.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் திணைக்கள தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரின் ஊடாக (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணபத்தை மாகாண அமைச்சு செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் ) "செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். " உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பங்கள் அனுப்பும் "சபரகமுவ மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் " எனக் குறிப்பிடுதல் வேண்டும்குறித்த திகதியின் . பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் ,பதவிக்குரிய தகைமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

06.இவ் ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் , இந்த பதிவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்த்தாகும்.

07.இதன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வழிக்காட்டுதலின் படி ,

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ் ரத்னாயக்க,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
2025.07.11.

**இணைப்பு 02**

**சபரகமுவ மாகாண சபை அரச சேவையின் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிர்வாக சேவை பிரிவில் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பம்.**

01. முழுப் பெயர் :- ............................................................................

02. முதல் எழுத்துடன் பெயர்:- ............................................................................

03. உத்தியோகபூர்வ முகவரி :- ............................................................................

04. தனிப்பட்ட முகவரி :- ............................................................................

05. பிறந்த திகதி :- ................. 2025.08.11 திகதிக்கு வயது:-...........................

06. பெண்/ஆண் :- ............................................

07. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- .........................................

08. அலுவலக தொலைபேசி இலக்கம் :- ......................... கைபேசி இலக்கம் :- ................

09. முதல் நியமன திகதி :- ..........................................

10. சேவை உறுதி செய்யப்பட்ட திகதி :- ..........................................

11. நிர்வாக தரம் II க்கு பதவி உயர்வு செய்யப்பட்ட திகதி :- ....................................

12. நிர்வாக தரம் I க்கு பதவி உயர்வு செய்யப்பட்ட திகதி :- .....................................

13. தற்போதைய பதவி நிலை மற்றும் நியமன திகதி :- ......................................................

14. முதுகலை டிப்ளோமா/ பிஎச்டி/தத்துவவேதியல்/(வைத்திய வாரிய ) கல்விச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத /(வைத்திய வாரிய) கல்விச் சான்றிதழ் பெற்றுக் கொண்ட/ தத்துவவேதி தொடர்பான தகவல்கள்:-

| முதுகலை டிப்ளோமா/ பிஎச்டி/தத்துவவேதியல்/(வைத்திய வாரிய ) கல்விச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத /(வைத்திய வாரிய) கல்விச் சான்றிதழ் பெற்றுக் கொண்ட/ தத்துவவேதி | பெற்றுக் கொண்ட நிறுவனம் | கால எல்லை | தகைமை பூர்த்தி செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

15. அண்மைய 05 ஆண்டுகளில் வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டின் படி இறுதி மதிப்பீடு :-

| வருடம் | இறுதிமதிப்பீடு<br>(சிறப்பானது / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது / திருப்தியற்றது) |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

16. சர்வதேச அளவிலான சஞ்சிகைளில் கல்வி ஆராய்ச்சி / வெளியீடுகள் அல்லது இலங்கை புத்தக வெளியீடுகள் குழுவின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்ட புத்தகங்கள் :-

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

17. பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பற்றிய தகவல்கள் :-

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

18. மொழித் திறன் :-

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

19. சேவை அனுபவங்கள் :-

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

20. வேறு தகவல்கள் :-

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

21. பெறப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் :- ...............................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

திகதி :- ....................................     .........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

<u>நிறுவன தலைவரின் பரிந்துரை :-</u>

................................................ ( சேவை), தரம் .................. இல் சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ................................ , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் / இல்லை எனவும் , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் அதிகாரிக்கு எதிராக இவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவில்லை எனவும் , எதிர்காலத்தில் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் / இல்லை எனவும் , சான்று பகர்கின்றேன். மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு அவர் தகுதியானவர் / தகுதியற்றவர் என குறிப்பிடுவதுடன் , அதன் அடிப்படையில் விண்ணப்பப்படிவத்தினை பரிந்துரைகின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி ....................................     .........................................................

நிறுவன தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தி யோகபூர்வ முத்திரை

திணைக்களத்தலைவரின் பரிந்துரை :-

.................................................... ( சேவை) , தரம் .................. இல் சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ................................ , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் / இல்லை எனவும் , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் அதிகாரிக்கு எதிராக இவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவில்லை எனவும் , எதிர்காலத்தில் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் / இல்லை எனவும் , சான்று பகர்கின்றேன். மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு அவர் தகுதியானவர் / தகுதியற்றவர் என குறிப்பிடுவதுடன் , அதன் அடிப்படையில் விண்ணப்பப்படிவத்தினை பரிந்துரைகின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி ..................................

.....................................................

திணைக்களத்தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தி யோகபூர்வ முத்திரை

அமைச்சு செயலாளரின் /பிரதான செயலாளரின் பரிந்துரை :-

.................................................... ( சேவை) , தரம் .................. இல் சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி .......................................... , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் / இல்லை எனவும் , முந்தைய 05 வருடக் காலப்பகுதியில் அதிகாரிக்கு எதிராக இவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவில்லை எனவும் , எதிர்காலத்தில் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் / இல்லை எனவும் , சான்று பகர்கின்றேன். மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு அவர் தகுதியானவர் / தகுதியற்றவர் என குறிப்பிடுவதுடன் , இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கலாம் என்பதனையும் பரிந்துரைகின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி ..................................

.....................................................

அமைச்சு செயலாளரின் /பிரதான செயலாளரின்
கையொப்பம் மற்றும்
உத்தி யோகபூர்வ முத்திரை